பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

18. 09. 2024 7. 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு சற்று முன் தொடங்கியது.
2. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் செல்கிறார்.
3. பிரதமர் திரு நரேந்திரமோடி மூன்று நாள் பயணமாக வரும் 21-ஆம் தேதி அமெரிக்கா செல்கிறார்.
4. மத்திய பட்ஜெட்டில் வெளியிட்ட அறிவிப்பின் அடிப்படையில் என் பி எஸ் வாத்சல்யா திட்டத்தை நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்.
5. இலங்கையில் வரும் 21-ஆம் தேதி நடைபெறவுள்ள அதிபர் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று நள்ளிரவுடன் நிறைவடைகிறது.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு சற்று முன் தொடங்கியது.

வாக்குப்பதிவு மாலை ஆறு மணி வரை தொடர்ந்து நடைபெறும்.

**Anantnag, Pulwama, Shopian, Kulgam, Doda, Ramban, Kistwar** ஆகிய ஏழு மாவட்டங்களில் இடம்பெற்றுள்ள 24 சட்டப்பேரவை தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இன்றைய தேர்தலில் 219 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

23 லட்சத்திற்கும் மேற்பட்டோர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பபட்டுள்ளது.

தேர்தலை நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக ஜம்மு-கஷ்மீர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மூவாயிரத்து 276 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு, அவை 100 சதவீதம் இணையதளம் மூலம் கண்காணிக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இரண்டாவது கட்டமாக 26 தொகுதிகளில் வரும் 25-ஆம் தேதியும், மூன்றாவது மற்றும் இறுதிக்கட்டமா 40 தொகுதிகளில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதியும் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் எட்டாம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது.

இதன்படி ஆயிரத்து 31 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

வேட்புமனுக்களை விலக்கிக் கொள்வதற்கான கால அவகாசம் நேற்று நிறைவடைந்தது.

190 பேர் தங்கள் மனுக்களை திரும்பப்பெற்றுக் கொண்டனர்.

இம்மாநிலத்தில் அடுத்த மாதம் ஐந்தாம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

[]<<<>>>[]

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் செல்கிறார்.

அங்கு மாளவியா தேசிய தொழில்நுட்பக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று அவர் உரையாற்றுகிறார்.

600 படுக்கைகள் கொண்ட மாணவர்களுக்கான புதிய விடுதியையும் குடியரசுத் தலைவர் திறந்து வைக்கிறார்.

கடந்த கல்வி ஆண்டில் பட்டப்படிப்பை முடித்த ஆயிரத்து 361 பேருக்கு இன்றைய பட்டமளிப்பு விழாவில் திருமதி திரௌபதி முர்மு பட்டங்களை வழங்குகிறார்.

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திரமோடி மூன்று நாள் பயணமாக வரும் 21-ஆம் தேதி அமெரிக்கா செல்கிறார்.

டெலாவாரே மாகாணம் **Wilmington**-னில் நடைபெறும் நான்காவது குவாட் அமைப்பின் உச்சி மாநாட்டில் பிரதமர் பங்கேற்கிறார்.

இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய இந்த குவாட் அமைப்பு நாடுகளில் கடந்த ஓராண்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

இந்திய - பசிபிக் பிராந்தியத்தின் தற்போதைய சூழல் மற்றும் இந்த நாடுகளின் பலவேறு விஷயங்கள் குறித்தும் மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

குவாட் அமைப்பு மாநாட்டில் பங்கேற்கும் பல்வேறு நாடுகளின் தலைவர்களுடனும் திரு நரேந்திரமோடி இருதரப்பு பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

வரும் 22-ஆம் தேதி நியூயார்க்கில் இந்திய சமூகத்தினரிடையே பிரதமர் உரையாற்றவுள்ளார்.

இதையடுத்து வரும் 23-ஆம் தேதி ஐ நா பொதுச்சபைக் கூட்டத்திலும் திரு நரேந்திரமோடி உரையாற்றவுள்ளார்.

**[]<<<>>>[]**

ஷெடியூல்டு வகுப்பினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டு பிரச்சினையில் காங்கிரஸ் கட்சி இரட்டை நிலைப்பாட்டை கொண்டிருப்பதாக பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு அமித்ஷா குற்றம்சாட்டியுள்ளார்.

ஹரியானா மாநிலம் பிவானி என்ற இடத்தில் நேற்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், ஜம்மு-கஷ்மீரில் மீண்டும் 370-வது சட்டப்பிரிவை கொண்டுவர காங்கிரஸ் திட்டமிட்டிருப்பதாகவும், பிஜேபி ஆட்சியில் இருக்கும் வரை அது சாத்தியமாகாது என்றும் கூறினார்.

ஹரியானாவில் பிஜேபி அரசு 24 வேளாண் பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை அளித்திருப்பதாகவும் திரு அமித்ஷா தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மத்திய பட்ஜெட்டில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில் தேசிய ஓய்வூதிய திட்டமான என் பி எஸ் வாக்சல்யா திட்டத்தை நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்.

இந்த திட்டத்திற்கு சந்தா செலுத்துதல், சிற்றேடு வெளியிடுதல், புதிய இளம் சந்தாதாரர்களுக்கு நிரந்தர ஓய்வூதிய கணக்கு எண் அட்டைகளை விநியோகிப்பதற்கான இணைய தளத்தையும் அவர் தொடங்கி வைக்கிறார்.

இந்த திட்டம் தொடங்கி வைப்பதன் ஒரு பகுதியாக நாடு முழுவதும் 75 இடங்களில் ஒரே நேரத்தில் காணொலி வாயிலான நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**[]<<<>>>[]**

ஜவுளித்துறையில் நீடித்த வளர்ச்சி என்ற இலக்கை எட்டுவதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாக அத்துறைக்கான இணை அமைச்சர் திருமதி **pabitra margherita** தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று மூன்றாவது நீடித்த ஜவுளி மாநாட்டை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

ஜவுளித்துறையில் உலக அளவில் இந்தியா வேகமான வளர்ச்சியை பெற்று வருவதாகவும், அதிக வேலை வாய்ப்புக்களை வழங்கும் துறையாக உருவெடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

நவீன காலத்திற்கு ஏற்ப இந்த துறையில் தொழில்நுட்பங்களை புகுத்த அரசு முயற்சி மேற்கொண்டுள்ளதாக திருமதி பபித்ரா மார்கேரிட்டா தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

இலங்கையில் வரும் 21-ஆம் தேதி நடைபெறவுள்ள அதிபர் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று நள்ளிரவுடன் நிறைவடைகிறது.

பிரச்சாரம் முடிவடைந்த பின்னர் எந்த ஒரு தனி நபரோ, அரசியல் கட்சிகளோ வாக்காளர்களை ஈர்க்கும் பணியில் ஈடுபடக்கூடாது என்று அந்நாட்டு தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

நேர்மையான முறையில் தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்ய அரசியல் கட்சிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் வாக்குப்பதிவுக்காக 13 ஆயிரத்து நான்காயிரம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு நடவடிக்கைகளும் பலப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

இந்தியா – உருகுவே இடையே வெளியுறவு அமைச்சக ஆறாவது சுற்றுப் பேச்சுக்கள் நேற்று அந்நாட்டின் மாண்டி வீடியோ நகரில் நடைபெற்றது.

வர்த்தகம், முதலீடு, தகவல் மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையே பொதுவான நலன் அளிக்கும் வகையில் மண்டல மற்றும் உலக அளவிலான பிரச்சினைகள் குறித்தும் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியா சார்பில் பங்கேற்ற குழுவுக்கு வெளியுறவுத்துறையின் கிழக்குப் பகுதிக்கான செயலாளர் திரு ஜெய்தீப் மஜூந்தா தலைமை வகித்தார்.

உருகுவே சார்பில் அந்நாட்டு வெளியுறவு துணை அமைச்சர் திரு நிக்கோலஸ் அல்பர் டோனி தலைமையிலான குழு பங்கேற்றது.

**[]<<<>>>[]**

சூறாவளியால் பாதிக்கப்பட்டுள்ள மியான்மருக்கு சத்பவ் திட்டத்தின் கீழ் 53 டன் வெள்ள நிவாரண பொருட்களை இந்தியா அனுப்பி வைத்துள்ளது.

யாகி என்ற சூறாவளி தாக்குதலால் மியான்மரில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர். ஏராளமான கட்டிடங்கள் சேதமடைந்தன.

இதையடுத்து மனிதாபிமான உதவியாக அந்நாட்டிற்கு ஒரு மில்லியன் டாலர் மதிப்பிலான நிவாரண பொருட்களை இந்தியா அனுப்பி வைத்துள்ளது.

ஜெனரேட்டர்கள், தற்காலிக கூடாரங்கள், சுகாதாரப் பொருட்கள், சூரிய விளக்குகள் உள்ளிட்டவை இந்த நிவாரணப் பொருட்கள் அடங்கும்.

இந்தியாவின் கிழக்கு நோக்கிய கொள்கை என்ற அடிப்படையிலும், அண்டை நாடுகளுக்கு உதவும் நடவடிக்கையாகவும் இந்த உதவிகள் வழங்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

பங்ளாதேஷில் சுகாதாரம், வெள்ள நிவாரணம் உள்ளிட்டவற்றுக்காக நடப்பு ஆண்டில் இரண்டு பில்லியன் அமெரிக்க டாலர் நிதி திரட்ட உலக வங்கி திட்டமிட்டிருப்பதாக அதன் பங்ளாதேஷ் இயக்குநர் திரு அப்துல்லா **Seck** தெரிவித்துள்ளார்.

பங்ளாதேஷில் அந்நாட்டு இடைக்கால அதிபர் திரு முகமது யூனுசை சந்தித்து அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பங்ளாதேஷுக்குத் தேவையான உதவிகள் அனைத்தையும் உலக வங்கி அளிக்கும் என்று அவர் உறுதியளித்தார்.

உலக வங்கியின் சார்பில் மானியங்கள் மற்றும் கூடுதல் கடனுதவி வழங்கவும் திட்டமிட்டிருப்பதாக திரு அப்துல்லா தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நேதன்யாகு அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் திரு யோவ் கேலண்ட்டும், டெல் அவிவ் ராணுவ தளத்தில் பாதுகாப்பு நிலைமை குறித்து ஆலோசனை மேற்கொண்டனர்.

லெபனானில் நேற்று வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில் இந்த ஆலோசனை முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இதற்கிடையே இந்த வெடிகுண்டு தாக்குதல் தொடர்பாக அறிவியல் பூர்வ விசாரணையை ஹெஸ்புல்லா அமைப்பினர் தொடங்கி உள்ளனர்.

இஸ்ரேல் நடத்தியுள்ள இந்த தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என அந்த அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

**[]<<<>>>[]**

வடகொரியாவின் வடகிழக்குப் பகுதியில் குறுகிய தொலைவு ஏவுகணைகளை செலுத்தி அந்நாடு சோதனை நடத்தியுள்ளது.

பியாங்யாங் பகுதிக்கு வடக்கே இன்று காலை ஏவுகணைகள் சோதனை நடத்தப்பட்டதை தென்கொரிய ராணுவ அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

என்றாலும் அது தொடர்பான கூடுதல் விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

**[]<<<>>>[]**

ஆசிய சாம்பியன் ஹாக்கிக் கோப்பையை ஐந்தாவது முறையாக வென்றுள்ள இந்திய ஆடவர் அணிக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், இந்திய அணியின் சிறப்பான திறமை மற்றும் அர்ப்பணிப்பு நாட்டை பெருமையடையச் செய்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

சீனா ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் ஆடவர் பிரிவில் இந்தியாவின் கிரண் ஜார்ஜ் - ஜப்பானின் **kenta nishimoto-**யை எதிர்கொள்கிறார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் மாளவிகா பன்சோத் - இந்தோனேஷியாவின் **gregoria tunjung** -யை எதிர்கொள்கிறார்.

*END OF NEWS*